**<u>முதன்மை மாவட்ட நீதிமன்றம், கரூர்.</u>**

**<u>MCOP. No. 331/2025</u>**

2026–ம் வருடம் ஜூலை திங்கள் 21–ம் நாளன்று 2ம் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியாக எ.ம.சா.1–வது நபரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54 விதியின்படி 95வது பிரிவின்படி ஏற்பட்டுள்ளபடி) திருமதி.இந்துமதி, உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்.** | **: சங்கரபாண்டியன்** | **தொழில்** | **:** |
| **த/பெ.** | **:** | **வட்டம்** | **:** |
| **முகவரி** | **:** | **மதம்** | **:** |
| **ஜாதி** | **:** | **வயது** | **:** |

**<u>முதல் விசாரணை</u>**

நான் இம்மனுவில் 2ம் எதிர்மனுதாரர். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அது என்னுடைய தகவலின் பேரில் தயாரிக்கப்பட்டு, அதை நான் படித்து பார்த்து கையெழுத்திட்டேன்.

1. TN–47–AM–8721 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தின் காப்பீடு சான்றிதழ் அசல் எ.ம.சா.ஆ.1,

2. வாகன உரிமையாளர் மற்றும் ஓட்டுநருக்கு எங்கள் நிறுவனத்திலிருந்து அனுப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் எ.ம.சா.ஆ.2,

3. வாகன ஓட்டுநர் வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை அசல் எ.ம.சா.ஆ.3,

4. வாகன உரிமையாளர் வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை அசல் எ.ம.சா.ஆ.4,

5. மோட்டார் வாகன ஆய்வாளர் வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை அசல் எ.ம.சா.ஆ.5,

6. TN-47-AM-8721 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வு அறிக்கை அசல் எ.ம.சா.ஆ.6 ஆகியவை குறியீடு செய்யப்படுகிறது. மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**<u>மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1ம் மனுதாரரின் வாகனம் விபத்து சமயத்தில் எங்களது காப்பீட்டு நிறுவனத்தினால் காப்பீடு செய்யப்பட்டு நிலுவையில் இருந்தது என்றால் சரிதான். மனுதாரர் எனது காப்பீட்டு நிறுவனத்தினை பொறுத்தவரை 3ம் தரப்பினர் என்றால் சரி. 1ம் எதிர்மனுதாரரின் வாகனத்தினை ஓட்டிய ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்று நான் தவறாக விசாரித்து வாக்குமூலம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மனுதாரருக்கு எங்கள் நிறுவனம் தான் இழப்பீடு வழங்கவேண்டும் என்றும் இழப்பீடு வழங்க வேண்டுவதிலிருந்து தப்பிக்க வேண்டி பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல. எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒப்பம்/-S.சுமதி.,
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.